Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ ஏப்ரல் ௴ 26௳, சனிக்கிழமை. [இதழ் ந. 6.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

ஜெர்மனியின் தலைநகரான பர்லினை, பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் சென்றவாரம் மிகக் கடுமையாகத் தாக்கின. நகர பத்தியைக் குறிபார்த்து, அநேக பலமான வெடிகுண்டுகள் போடப்பட்டன. இதுவரைக்கும் பர்லினுக்குப் போன ஆகாய விமானங்களைவிட அதிகமான ஆகாய விமானங்களும், இதுவரை கொண்டுபோன வெடிகுண்டுகளைவிட அதிகமான வெடிகுண்டுகளும், பர்லினுக்குச் சென்றன, என்று பிரிட்டிஷ் மந்திரிசபை செய்தி யறிக்கை கூறுகிறது.

பிரிட்டிஷ் வெடிகுண்டு படையின் ஆகாய விமானமொன்று, பிரிட்டனுக்கு வரும்போது, திரும்பிப் பார்த்ததில், பர்லினின் பல பாகங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிவது நன்றாகத் தெரிந்ததாம். நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிகிற இடங்களைக் குறியாகக் கொண்டு, மேலும் மேலும் வெடிகுண்டுகள் போடப்பட்டன. சீதோஷ்ண நிலை மிகவும் கஷ்டமானதாயிருந்தது. கடுமையான குளிரில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பறக்கவேண்டியிருந்தது. விமானங்கள்மேல் பனிக்கட்டி உறைந்துவிட்டது. போகிற வேகத்தில் அப்பனிக்கட்டிகள் உடைவது, விமான எஞ்சின்களுடைய சத்தத்திற்கு மேல், லேசாகக் கேட்டது. பிரிட்டிஷ் விமானப் படை தாக்குதலினால், பர்லினில் ஏராளமான சேதம் உண்டாயிருப்பதாகத் தெரிகிறது.

கீழ் கப்பற்சாலைகளில், விமானத்தாக்குதலால், ஏராளமாக உண்டான சேதங்களின் விவரத்தை பிரிட்டிஷ் விமான மந்திரி சபை வெளியிட்டிருக்கிறது. சேர்போர்க் என்ற பிரான்சின் வடக்குக் கடற்கரைப்பட்டணத்தை, பட்டப்பகலில், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. அங்குள்ள கப்பல் கட்டும் சாலைகள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஜெர்மானியர்கள் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை ; ஆகையால் எந்த ஜெர்மன் விமானங்களும் எதிர்த்துப் போராடவில்லை. அநேக வர்த்தகக்கப்பல்கள் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

ஜெர்மனியிலும், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளின் முக்கியமான இடங்கள் மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. மேற்கு ஜெர்மனியிலுள்ள யுத்தத் தளவாட இடங்கள் தாக்கப்பட்டன. கலோனைத் தாக்கியதன் பிறகு, அங்கு நெருப்புப்பற்றி எரியும் காட்சிகள் காணப்பட்டன. தூசல்தார்ப், ஆச்சன் முதலிய ஜெர்மன் ஆகாய விமானத் தளங்கள் தாக்கப்பட்டன. பிரெஸ்ட் என்ற பிரெஞ்சு கடற்கரைப்பட்டணத்தைத் தாக்கியதால், கப்பல் நிற்கும் இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டது. கீன் என்ற இடத்திலுள்ள ஆகாய விமானத் தளம் தாக்கப்பட்டது.

ஹாலந்தில், ராட்டர்டம் முதலிய முக்கியமான இடங்கள், நார்வேயின் கடலோரத்துறை முகங்கள், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

வடக்குக் கடலில், ஐந்து கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு, முழுகடிக்கப்பட்டன.

ஜெர்மனிக்கு உணவுப் பொருள் முதலியன கொண்டு சென்ற ஒரு 'சப்ளை' கப்பல் (சுமார் 5,000 டன் எடையுடையது) பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு, முழுகும் சமயத்தில் விடப்பட்டது. மற்றொரு கப்பல், ஒரு 'சப்ளை' கப்பலுக்குப் பாதுகாப்புக் கப்பலாக வந்தது, இப்படியே தாக்கப்பட்டு, சேதம் உண்டாக்கப்பட்டது. இந்தக்கப்பல் சுமார் 7,000 டன் எடையுள்ளது. இவையல்லாமல், இன்னும் இரண்டு கப்பல்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. அநேக சிறு பாதுகாப்புக் கப்பல்கள், வெடி குண்டுகளினாலும், யந்திர பீரங்கிகளினாலும், தாக்கப்பட்டன.

ஒரு பிரிட்டிஷ் விமானம், பர்லினுக்குப் போகும்போது ஒரு ஜெர்மன் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது ; திரும்பிவரும்போதும் ஒரு ஜெர்மன் விமானத்தை வீழ்த்தியது.

பர்லினைப் பலமாக தாக்கியதற்கு, பழிக்குப்பழி வாங்குவதுபோல, ஜெர்மன் விமானங்கள், லண்டன் மாநகரின்மேல் நெருப்புக்குண்டுகளையும், வெடிகுண்டுகளையும் போட்டன. மூன்று ஜெர்மன் விமானங்கள், விமானம் சுடும் பீரங்கிகளால் தாக்கப்பட்டு கீழே வீழ்த்தப்பட்டன. அவைகளில் இரண்டு போர்ட்ஸ்மத் என்ற இடத்தைத் தாக்கியபோது வீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ் பார்லிமெண்டு கட்டிடங்கள் ஜெர்மன் விமானங்களால் தாக்கப்பட்டன. புத்தகசாலை ஜன்னல்கள் உடைந்துபோய்விட்டன. காமன்ஸ் சபைத் தலைவர் வீடு பழுதாக்கப்பட்டது.

இங்கிலாந்தின் தெற்கு, கிழக்கு, வடகிழக்கு பாகங்களை, ஜெர்மன் விமானங்கள் தாக்கின. அதிகமான சேதம் ஒன்றும் விளைவிக்க முடியவில்லை. லண்டன் பிரதேசத்தில், ஜெர்மன் விமானங்கள் கீழாகப் பறந்து, நெருப்புச் குண்டுகளையும், வெடிகுண்டுகளையும் போட்டன.

பிரிட்டிஷ் ஆகாய விமான இரவுப்படை விமானங்கள் 50 நாளில், 66 ஜெர்மன் விமானங்களை, பிரிட்டனில், சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. இதில் மார்ச்சு மாதத்தில் 21-ம், எப்ரலில் இதுவரைக்கும் 45-ம் இரவுப்படை விமானங்கள் ஜெர்மன் விமானங்களை அழித்திருக்கின்றன. கடலில் சுட்டு வீழ்த்தப்பட்ட ஏராளமான விமானங்கள் இந்தக் கணக்கில் சேரவில்லை.

### 2. ஆப்ரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

கிழக்காப்பிரிக்காவில், பிரிட்டிஷ் படைகளுக்குச் சில வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. சிரிநீகாவில் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையும், ஆஸ்திரேலிய ஆகாய விமானப்படையும், வெடிகுண்டுகளினாலும், யந்திர பீரங்கிகளினாலும் எவ்வளவு தாக்க முடியுமோ, அவ்வளவு தாக்கியிருக்கின்றன. மோடார் போக்குவரத்து வண்டிகள், ஆகாய விமானம் இறங்குமிடங்கள், பண்டகசாலைகள், துருப்புகள் ஒன்றுசேர்ந்த இடங்கள் ஆகிய இவைகளின்மேல் வெடி குண்டுகள் போடப்பட்டன. அதனால் பகைவர்களுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது.

தார்னாவில், கீழே இருந்த பகைவர்களுடைய ஆகாய விமானங்கள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

லிபியாவில், தோப்ரூக், சோலூம் என்ற இடங்களுக்கருகில், பிரிட்டிஷ் துருப்புகள் கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. பகைவர்களுடைய துருப்புகளுக்கும், மோடார் வண்டிகளுக்கும் பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது. ஐந்து ஆபீசர்கள், 72 கீழ்த்தர ஆபீசர்கள் பிரிட்டிஷாரால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். ஜெனரல் கிரேசியோசி என்ற இடாலிய தளகர்த்தர் கைதியாகப் பிடிக்கப்பட்டு,

அட்டிஸ் அபாபா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். மீசோ என்ற இடத்தை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கியபோது, ஜெனரல் கிரேசியோசி இறந்துபோய்விட்டார் என்று அவரை விட்டுவிட்டு இடாலியர்கள் ஓடிவிட்டார்கள். ஆனால் அவர் இறக்கவில்லை. காயமடைந்த அவரும், இன்னும் கைது செய்யப்பட்ட அனேக இடாலியர்களும் அட்டிஸ் அபாபாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

தெற்கு ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகள் அட்டிஸ் அபாபாவிலிருந்து, தேசியை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கின்றன. தேசி என்பது இடாலிய கிழக்காப்பிரிக்காவில் பாக்கி நிற்கும் ஒரு முக்கியமான இடம்.

தோப்ருக் என்ற இடத்தைப் பாதுகாப்பதில், இந்திய மோடார்படைகள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன. மேற்குப் பாலைவனத்தில் நடக்கும் யுத்தத்திலும், இன்னும் இதர இடங்களில் நடக்கும் யுத்தங்களிலும், இந்தியத் துருப்புகள் பங்கெடுத்துக்கொண்டு, திறமையாய் போர்புரிந்து வருகின்றன.

பிரிட்டிஷ் ஆகாயவிமானப் படை, பென்காசி, திரிபோலி, தானியா என்ற பகைவர்களுடைய இடங்களை வெடிகுண்டுகளால் தாக்கின. அக்ரோமா, எல் ஆதம், பார்டியா, மானஸ்திர் என்ற இடங்களில் பகைவர்களுடைய போக்குவரத்து மோடார்கள் பிரிட்டிஷ் வெடிகுண்டுகளால் நாசப்படுத்தப்பட்டன. பர்க்கா ஆகாயவிமானத்தளம் தாக்கப்பட்டது. கஜாலா ஆகாயவிமானத் தளத்தை யந்திர பீரங்கிகளினால் சுட்டு, பகைவர்களுடைய அநேக விமானங்களை அழித்தார்கள்.

ஹெயிலி செலாசி என்ற அபிசீனியச் சக்ரவர்த்தி அட்டிஸ் அபாபாவுக்குச் சீக்கிரத்தில் திரும்பி வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. கடைசியாக, அந்த சக்கிரவர்த்தி அட்டிஸ் அபாபாவுக்கு 110 மைல் வடமேற்கில் உள்ள தேப்ரா மார்கோஸ் பிரதேசத்தில், தம்முடைய பட்டாளங்களுக்குத் தலைமை வகித்து இருப்பதாகத் தெரிகிறது.

திரிபோலி என்ற மேற்கு லிபியாவின் முக்கியமான துறைமுகத்தை, பிரிட்டிஷ் கப்பற்படை இடைவிடாது தாக்கியது. 40 நிமிஷங்களுக்குமேல் தொடர்ச்சியாக 15 அங்குல குண்டு (‘ஷெல்’)களாலும், குறைந்த அளவுள்ள குண்டுகளாலும், துறைமுகத்தையும், துறைமுகத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்டடங்களையும், பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் தாக்கின. ஆறு ‘சப்ளை’ கப்பல்கள் மேலும், ஒரு யுத்தக் கப்பல் மேலும், குண்டுகள் தாக்கின என்று தெரிகிறது.

திரிபோலியைத் தாக்கின சண்டையில், துருப்புகளைக் கொண்டு செல்லும் நான்கு ஜெர்மன் ஆகாய விமானங்களை, பிரிட்டிஷார் சுட்டு வீழ்த்தினார்கள். அந்த விமானங்கள் நெருப்புக்கு இரையாய் விட்டன.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

பால்கன் பிரதேசத்தில் நடக்கும் சண்டையைவிட, அட்லாண்டிக் கடலில் நடக்கும் யுத்தம்தான் மிக முக்கியமானது என்று லார்டு ஹாலிபாக்ஸ், அமெரிக்க பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். (லார்டு ஹாலிபாக்ஸ் முன்பு லார்டு இர்வின் என்ற பெயருடன் இந்தியாவின் வைஸ்ராயாய் இருந்தவர். பின்பு, பிரிட்டிஷ் மந்திரி சபையில், அயல் நாட்டு மந்திரியாயிருந்தவர்.) பால்கன் பிரதேசத்தில் நிலைமை நெருக்கடியாயிருந்தபோதிலும், பால்கனிலும், வடக்காப்பிரிக்காவிலும் பகைவர்கள் சில வெற்றிகளை அடைந்திருந்தாலும், அட்லாண்டிக் கடலில் நடக்கும் யுத்தம்தான் கடைசி முடிவை நிர்ணயிக்கும்படியான யுத்தம், என்று லார்டு ஹாலிபாக்ஸ் கூறினார்.

அட்லாண்டிக்கடல் யுத்தம் இன்னும் போகப் போக அதிக மும்முரமாக நடக்கும் என்று தெரிகிறது. சென்ற சில வாரங்களாக, ஜெர்மனி தன்னுடைய கப்பற் படையை அதிகமாக உபயோகப்படுத்தி வருகிறதென்றும், இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை அம்மாதிரி உபயோகப்படுத்தவில்லை என்றும், அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு அதிகமாக வரும் யுத்த சாமான்கள் ஏற்றுமதியைத் தடுக்கவேண்டுமென்பதுதான் ஜெர்மனியின் முதன்மையான நோக்கமென்றும், ஆனால் இடலியின் கப்பற்பலம் முறியடிக்கப்பட்டதால் ஜெர்மனிக்கு உதவிபலம் இல்லை என்றும், மத்திய தரைக் கடலில் இருக்கும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களிற் சில அட்லாண்டிக் யுத்தத்தில் ஈடுபடலாமென்றும், “ராய்டர்” விசேஷ நிருபர் கூறுகிறார்.

அட்லாண்டிக் யுத்தத்தில் ஒரு முக்கியமான சம்பவம் பிரபல ‘சப்மரீன்’ தளகர்த்தர் இறந்தது. ஜெர்மனியின் திறமையுள்ள மூன்று ‘சப்மரீன்’ தளகர்த்தர்களில், இரண்டு பேரை ஜெர்மனி இழந்துவிட்டது. ஆட்டோ கிரெச்னர் என்ற ஜெர்மன் தளகர்த்தர் இப்போது பிரிட்டிஷ் கைதியாக இருக்கிறார். அவரை “அட்லாண்டிக் கடலின் ஓநாய்” என்று ஜெர்மனியில் அழைப்பது வழக்கம். அவருடைய ‘சப்மரீன்’ “யூ–99” பிரிட்டிஷாரால் முழுகடிக்கப்பட்டது. அதேமாதிரி ஷீப்கியினுடைய ‘சப்மரீன்’ “யூ–100”-ம் முழுகடிக்கப்பட்டது. இந்த விவரங்கள், பிரிட்டிஷ் சப்பற் படையின் மந்திரி, மிஸ்டர் ஏ.வி. அலெக்சாந்தர் அவர்களால் சென்ற வாரம் ஒரு பிரசங்கத்தில் கூறப்பட்டவை.

அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு யுத்தசாமான்கள் வருவதை ஜெர்மனி தடுக்க முயற்சிப்பதை மாற்ற அமெரிக்க நிபுணர்கள் சிலர் ஒரு யோசனை கூறுகிறார்கள். அதாவது, அமெரிக்காவின் வடக்கு மாகாணமாகிய, லாப்ரடாரிலிருந்து, பிரிட்டிஷ் தீவுகள் வரைக்கும், இருபக்கமும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் நிற்கும் பாதையொன்று அமைக்கவேண்டும் என்பதே. இப்போது “கான்வாய்” திட்டம் என்ற கப்பல் துணைப்பாதுகாப்பு திட்டம் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதனால் கப்பல் சேதங்கள் அதிகமாக இருக்கின்றனவென்றும், அதைக் குறைக்க வேண்டுமானால் புதிய திட்டத்தைக் கையாளுவது நல்லதென்றும், அவர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு உதவி செய்வதை இன்னும் அதிகப்படுத்தும் விஷயமாக, பிரசிடெண்டு ரூஸ்வெல்டும், கனடாவின் முதன் மந்திரி மிஸ்டர் மெக்கன்சி கிங் என்பவரும், சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு நியூ யார்க்கில் நீண்ட நேரம் பேசினார்கள், அதன் பயனாக, கனடாவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும், தற்பாதுகாப்புக்காக ஒற்றுமையுடன் வேலை செய்வதென்றும், பிரிட்டனுக்கு உதவி அனுப்புவது துரிதமாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், ஒரு தேசத்துக்கு வேண்டிய தற்பாதுகாப்பு யுத்த சாமான்களை மற்ற தேசம் அதிசீக்கிரம் செய்யக்கூடுமானால், சீக்கிரம் செய்யக்கூடிய தேசம், மற்ற தேசத்துக்கு அந்த உதவியைச் செய்யவேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பிரிட்டனுக்காக, கனடா யுத்த ஆயுதங்கள், மருந்துகள், செய்வதன் சம்பந்தமாக அமெரிக்காவிடம் வாங்கும் சாமான்கள், வாடகை—கடன் சட்டத்தின் கீழ் பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்ட சாமான்கள் என்று கருதப்படும். அடுத்த வருஷத்தில், கனடா, அமெரிக்காவுக்கு 20 அல்லது 30 கோடி ‘டாலர்’கள் (அமெரிக்க நாணயம்) பொறும்படியான பாதுகாப்புச் சாமான்கள் ‘சப்ளை’ செய்யவேண்டும். வெடிகுண்டு மருந்துகள், யுத்த தந்திரக் கருவிகள், அலுமினியம், கப்பல்கள்—இவைகள் அந்தச் சாமான்களில் சேர்ந்தவை. அமெரிக்காவிடமிருந்து கனடா வாங்கும் சாமான்கள் வருகிற வருஷம் மிக அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றி கனடாவின் முதன் மந்திரி, மிஸ்டர் மெகன்சி கிங், இரண்டு தேசங்களுக்கும் நன்மை தரக்கூடியதென்று தன்னுடைய மகிழ்ச்சிப் பெறுக்கைத் தெரிவித்திருக்கிறார். பிரசிடெண்டு ரூஸ்வெல்ட், மே மாதம் 10—15 தேதிகளுக்கிடையில்

கனடாவுக்கு விஜயம் செய்வாரென்றும், கனடாவின் கவர்னர்-ஜெனரல், அத்லோன் பிரபுவிடம் தங்குவாரென்றும், அவர் அறிவித்தார்.

## 4. கிரீஸ்.

கிரேக்கத் துருப்புகள், கடைசியில், வேறுவழியில்லாமல், சரணாகதியடைந்துவிட்டன. யுத்தகளத்தில் கிரேக்கத் துருப்புகள் காட்டிய வீரத்துக்கு மெச்சி, கிரேக்க ஆபீசர்கள் தங்களுடைய பட்டாக் கத்திகளையும், ராணுவப் பெருமைகளையும், கைதியான பிறகுங்கூட, வைத்திருக்கலாம், என்று பகைவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். தற்போது கிரேக்கக் கைதிகள், “ கான்சென்ட்ரேஷன் காம்ப் ” என்ற கைதிக் கொட்டடியில் வைக்கப்பட்டு, பிறகு விடுதலையாக்கப்படுவார்கள்.

கிரேக்கர்களுடைய யுத்த ஆயுதங்கள், இதர சாமான்கள், ஆகாய விமானங்கள், முதலியவைகள் பகைவர்களால் கைப்பற்றிக்கொள்ளப்படும்.

படையெடுத்த அச்சுவல்லரசுகளின் துருப்புகளுக்கும், சரணாகதியடைந்த கிரேக்கத் துருப்புகளுக்கும் ஏப்ரல் மாதம் 23-ம் தேதி புதன்கிழமை மாலை 6-மணிக்கு, சாலோநீகாவுக்கருகில், சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

கிரேக்க அரசர் ஜார்ஜும், அவருடைய மந்திரி சபையும், தங்களுடைய அரசாங்கத் தலைமை ஸ்தானமாகிய ஆதன்ஸ் நகரை விட்டு நீங்கி, கிரீசுக்குத் தென்கிழக்கிலுள்ள கிரேக்கத் தீவாகிய கிரீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். போவதற்குமுன் கிரேக்க நாட்டுமக்களுக்கு விடுத்த அறிக்கையில், யுத்தத்தின் கொடுமையான விதி தங்களை நாட்டைவிட்டுப் போகும்படி செய்ததென்றும், தாங்கள் வெளிச்சென்றாலும் வெளியிலிருந்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தப்போவதாகவும், இரண்டு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஆறு மாத காலம் வெற்றியுடன் போராடிக் கடைசியில் கிரேக்கத் துருப்புகள் களைத்துவிட்டனவென்றும், இருந்தபோதிலும், பிரதம தளகர்த்தருக்கும், அரசாங்கத்துக்கும் தெரியாமல், எபைரஸ்ஸிலிருந்த கிரேக்கத் துருப்புகள் பகைவர்களுடன் சமாதானம் செய்துகொண்ட காரணம் தெரியவில்லை யென்றும், கிரேக்கர்கள் தைரியத்துடன் இருந்தால் நல்ல நாள்கள் திரும்பிவருமென்றும், கிரேக்க தேசமும், மக்களும், நீடூழி காலம் வாழவேண்டுமென்றும், கிரேக்க அரசர் கூறியிருக்கிறார்.

கிரேக்க முதன் மந்திரி, கூடாரஸ், இதேமாதிரி வேறொரு அறிக்கையில், சரணாகதியையும், சமாதானத்தையும் கண்டித்து, மக்கள் தைரியமாயிருக்க வேண்டும் என்றும், கடைசியில் வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

கிரேக்கப்படையின் ஒரு பெரும்பாகம், பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, நியூஜிலாந்து படைகளுடன் சேர்ந்து வேறு முனைகளில் விரோதிகளுடன் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சரித்திரப் பிரசித்திப்பெற்ற தெர்மோப்லே கணவாயருகில் பிரிட்டிஷ் படைகள் ஜெர்மனியர்களை எதிர்த்துவருவதாகச் சொல்லப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட செய்தி விவரங்களுக்குமுன் கிடைத்த செய்திச் சுருக்கம் பின்வருமாறு :—

கிரேக்கத்துருப்புகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளும், சென்றவாரம், ஜெர்மன் துருப்புகளுடன் கடுமையான போர்புரிந்தன. சரோந்தோபீரன் கணவாயை எதிர்த்த ஜெர்மானியர்கள், பிரிட்டிஷ் துருப்புகளால் பின் தள்ளப்பட்டார்கள். ஒலிம்பஸ் மலைக்குத் தெற்கேயுள்ள வேறொரு கணவாயை நெருங்கிய ஜெர்மன் துருப்புகள், அங்கிருந்த ஆஸ்திரேலியத் துருப்புகளால் விரட்டப்பட்டார்கள்

கிரீசோடு போர்தொடுத்த நாள்முதல் இதுவரைக்கும், 50,000 ஜெர்மானியர்கள் கிரேக்க யுத்தத்தில் உயிரிழந்தார்கள் என்று அமெரிக்காவின் ஐக்கியச் செய்தி அறிக்கை கூறுகிறது.

பிரிட்டிஷ் துருப்புகள், குறிதவராமல் சுட்டுக் கொடிய சேதம் விளைவிக்கின்றனவென்றும், கனமான பிரிட்டிஷ் ‘ டாங்க் ’ கிகள் தீவிரமாக திருப்பித் தாக்குகின்றனவென்றும், ஜெர்மன் ‘ ரேடியோ ’ வில் ஒரு ஜெர்மன் ஆபீசர் கூறியிருக்கிறார். கிரீசின் முதன் மந்திரி, காரிசிஸ் இறந்துவிட்டார். முதன் மந்திரி மெடக்சாஸ் இறந்தபோது, இவர் முதன் மந்திரியானார். ஜனவரிமீ முடிவில் காட்சியாஸ் என்ற கிரேக்க உப முதன் மந்திரி கிரேக்கத்துருப்புகளுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் கூறுவதாவது:—சென்ற ஆறுமாத காலமாக, கிரேக்கத்துருப்புகள் யுத்தத்தில் கௌரவமும், பெருமையும் பெற்றிருக்கின்றன. அவைகள் இப்போது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகின்றன. கிரேக்கர்களுடைய நோக்கம் நிறைவேறும் வரைக்கும், அதே தைரியமும், விடாமுயற்சியும் கொண்டு, கிரேக்கத்துருப்புகள் போராடும். மேலும் அவர் கூறுகையில், கிரேக்கர்கள் பக்கத்தில் நின்று போர் புரியும் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளுக்கும், தம்முடைய பாராட்டு நன்றியைத் தெரிவித்தார்.

தெற்கு யூகோஸ்லாவியாவிலிருந்து, பலமான ஜெர்மன் துருப்புகள் மேற்கு மாசிடோனியாவில் பிரவேசித்ததால், கிரேக்கத்துருப்புகள் அல்பேனியாவைவிட்டுப் பின்வாங்கிச்சென்று, புதிய இடங்களில் அமர்ந்தன.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை பகைவர்களுடைய போக்குவரத்து சாதனங்கள்மேல் வெடிகுண்டுகள் போட்டு, கிரேக்கத்துருப்புகளுக்குப் பேருதவி செய்துகொண்டுவருகிறது.

நேசதேசத்துருப்புகள் லாமியா என்ற இடத்திற்குத் தெற்கில் பின்வாங்கிச்சென்று, அங்கு கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது.

## 5. பால்கன்ஸ்.

யூகோஸ்லாவியா சென்ற வாரத்தில் ஜெர்மனிக்குச் சரணமடைந்தது.

யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேடை, ஜெர்மன் ஆகாய விமானங்கள் தாக்கியதால், 12,000 யூகோஸ்லாவிய மக்கள் உயிரிழந்தார்கள்.

தங்களைவிட யுத்த முஸ்தீப்பில் பலமடங்கு பலம் பொருந்திய ஜெர்மானியர்களோடு போர் புரிவது இயலாத காரியமென்றும், நாட்டுச் சுதந்தரத்தைக் காப்பதற்காக, யூகோஸ்லாவியர்கள் தைரியத்துடன் போர் புரிந்தார்களென்றும், நேசதேசத்தார்கள் எவ்வளவு உதவி வேண்டுமோ அவ்வளவு உதவி செய்வதற்கு முடியாத நிலைமையிலிருந்தார்களென்றும், சாகரெப் என்ற முக்கியமான இடத்தை ஜெர்மானியர்கள் பிடித்தது எதிர் பாராத காரியமென்றும், நடந்த விஷயங்களுக்காக வருந்தி யூகோஸ்லாவிய முதன் மந்திரி, ஜெனரல் சிமோவிச், ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

யூகோஸ்லாவியாவின் அரசர் பீடர், நாட்டை விட்டு வெளிச் செல்லும்போது, பொது ஜனங்களுக்கு விடுத்த அறிக்கையில் அரசரும், அரசாங்கமும் நாட்டைவிட்டுச் செல்வதன் காரணம், யூகோஸ்லாவியாவின் சட்டபூர்வமான பிரதிநிதிகள் ஜெர்மனிக்குச் சரணமடைந்தார்கள் என்று பிறர் சொல்லாமலிருப்பதற்கே என்றும், தான் திரும்பி வெற்றியுடன் தன் சொந்த நாடாகிய யூகோஸ்லாவியாவுக்கு வரும் வரையில் போர் முடிந்ததாகக் கொள்ளக்கூடாதென்றும் கூறினார்.

யூகோஸ்லாவியாவைப் பல துண்டுகளாக்கி, ஜெர்மனிக்குத் துணையாயிருந்த நாடுகளுக்குப் பங்கு போடும் முயற்சி நடந்துவருகிறது.

யூகோஸ்லாவியாவுக்குச் சொந்தமாயிருந்த மாசிடோனியா, திரேஸ், மோரேவியா மாகாணங்களில் சில பாகங்கள் பல்கேரியாவுக்குக் கொடுக்கப்பட்டன என்று ஜெர்மன் ‘ ரேடியோ ’ அறிவித்திருக்கிறது.

யூகோஸ்லாவியாவைப் பிரித்துக்கொடுப்பதன் சம்பந்தமாக முசலோனியின் மருமகனும், இடலியின் வெளிநாட்டு மந்திரியுமான கவுண்ட் சியானோ வியன்னாவில் ஹிட்லருடன் பேசிவிட்டு இடலிக்குச் சென்றதாகத் தெரிகிறது.

ஹிட்லர் தன்னுடைய 52-வது பிறந்த நாட்கொண்டாட்டத்தை பால்கன் சண்டைப் பிரதேசத்தில் கொண்டாடியதாகவும் தான் வசிக்கும் ஒரு ‘ ஸ்பெஷல் ’ ரயில் வண்டியில் தன்னுடைய சிப்பந்திகளுக்கு விருந்தளித்ததாகவும் பர்லினிலிருந்து ஒரு செய்தி கூறுகிறது.

யூகோஸ்லாவியரசைப் பங்கு போடுவதென்பது இப்போதில்லை என்றும், யுத்தம் முடிந்த பிறகு தான் அது சம்பந்தமான மகாநாடு கூடும் என்றும் ஒரு பர்லின் பத்திரிகை நிருபர் கூறுகிறார்.

இரண்டு யூகோஸ்லாவ் அரசியல் தலைவர்கள் யுத்தத்தில் உயிரிழந்தார்கள். குலோவெக் என்பவர் பெல்கிரேடில் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டு போட்டபோது இறந்துபோனார். மார்கோ தேகோவிச் என்ற மான்டினிக்ரர்களின் தலைவர் காயப்பட்டு கார்பு என்ற இடத்தில் இறந்தார். ஜெனரல் மிர்கோவிக் என்ற யூகோஸ்லாவிய ஆகாய விமானப்படைத்தலைவர் ஆகாய விமானப்போரில் பலமாகக் காயப்பட்ட போதிலும், உயிர்தப்பி ஒரு பத்திரமான இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்.

## 6. கப்பல் நிலைமை.

நான்கு அமெரிக்க சாமான் கப்பல்கள், வாடகை கடன் சட்டத்தின்கீழ், பிரிட்டனுக்கு உடனே மாற்றப்படும். பிரிட்டிஷ் கொடியின்கீழ் பதிவு செய்யப்பட்டு, பிரிட்டிஷ் ஆட்களாலேயே அக்கப்பல்கள் ஓட்டப்படும். அவைகளின் பெயர்: "ராபிண்டன் காஸ்டர்", "அல்மீரியா லைக்ஸ்", "எக்செம்பிளர்", "நைடிங்கேல்."

சாமான்கள் நிறைந்த பகைவர்களின் கப்பல் ஆப்பிரிக்காவிலுள்ள திரிபோலிக்குப் போகும்போது, "பெட்ரார்க்" என்ற பிரிட்டிஷ் 'சப்மரீன்'ல் முழுகடிக்கப்பட்டது.

இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும் 18 பிரெஞ்சு கப்பல்கள், பிரிட்டிஷாரால் குறுக்கிடப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. 8,000 டன் எடையுள்ள ஒரு கப்பல், 6,000 டன் 'சப்ளை' கப்பல் ஒன்று, 7,000 டன் வெடி குண்டு மருந்து சாமான் கப்பல் ஒன்று, ஆக இந்த மூன்று கப்பல்களும், பால்கன் பிரதேசத்தில் உள்ள பகைவர்களுக்குச் சாமான்கள் கொண்டு போகும்போது, பிரிட்டிஷ் கப்பற்படையால் 'டார்பிடோ' குண்டு போடப்பட்டு முழுகடிக்கப்பட்டன. வெடிகுண்டு மருந்து சாமான் கப்பல் சுக்கல் சுக்கலாய்ப் போய்விட்டது; அதில் உண்டான நெருப்புச் சுவாலைகள் 3,000 அடிக்குமேல் ஆகாயத்தில் எழுந்தன.

## 7. ஜப்பானும் சீனாவும்.

சென்ற வாரத்தில், ஜப்பானியத் துருப்புகள் பூசியன் என்ற சீன மாகாணத்தில் இரண்டு இடங்களில் இறங்கி, பூசௌ என்ற மாகாணத் தலை நகரைக் கைப்பற்றிக்கொண்டன. இதைப் பிடிப்பதற்கு ஆரம்பம்செய்தது ஜனவரிமீ 19௳; அப்போது மீன் என்ற நதியின் இருகரைகளிலும், ஜப்பானியத் துருப்புகள் திடும் பிரவேசமாக வந்து இறங்கின. பர்மா ரோட்டின் மேல் ஜப்பானிய ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன வென்றும், குங்கெடவோவில் உள்ள தொங்கும் பாலத்தை விமானங்கள் தாக்கியதால் மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும், ஜப்பானிய ராணுவத் தலைமை ஸ்தானத்தில் கூறப்படுகிறது.

ஜப்பானியர்கள் தென் மேற்குச் சீனாவுக்குள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். சேகியாங் மாகாணத்தில் பல திக்குகளிலிருந்து, ஜப்பானியத் துருப்புகள் முன்னேறிச் செல்கின்றன.

பெங்வா என்ற இடத்துக்கு 10 மைல் மேற்கிலுள்ள கிகோ ஜப்பானியர்களால் பிடிக்கப்பட்டது. ஷாங்கேயிக்குத் தெற்கிலுள்ள நிங்போ, வென்ச்சோ, என்ற இரண்டு துறைமுகப்பட்டணங்களை ஜப்பானியர் பிடித்துவிட்டனர்.

சீன தேசத்தின் கிழக்குக் கரையோரம் முழுவதும் பிடித்துவிட்டதாக, ஜப்பானியர்கள் கூறுகிறார்கள்.

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் பொருள் சம்பந்தமான உடன்படிக்கை சீக்கிரத்தில் கையெழுத்திடப்படும். அதன்படி, அமெரிக்கா, ஒரு கோடியே 25 லட்சம் பவுன் அமெரிக்க பொக்கிஷ நிதியிலிருந்து சீன நாணய நோட்டுகளைப் பாதுகாப்பதற்காகக் கொடுக்கப்படும்.

ஜப்பானின் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா சென்ற செவ்வாய்க்கிழமை மாலை, ஐரோப்பா பிரயாணத்திலிருந்து, டோக்கியோ (ஜப்பானின் தலைநகரம்) வுக்குத் திரும்பி வந்தார். ரஷ்யாவுடன் செய்துகொண்ட நடு நிலைமை உடன்படிக்கையைப் பற்றிக் கேட்டபோது, மூன்று வல்லரசுகளின் (ஜெர்மனி, இடலி, ஜப்பான்) அச்சு ஒப்பந்தத்திற்கும், இதற்கும் யாதொரு முரண்பாடும் இல்லையென்று கூறினார். அதி தூரக் கிழக்கரங்கத்திலிருந்து, ரஷ்யத்துருப்புகள் பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படும் செய்தியைப்பற்றிக்கேட்டபோது, "மாலதோவ் அல்லது ஸ்டாலினைக் கேட்டால் தெரியும்" என்று மிஸ்டர் மத்சூகா பதிலளித்தார்.

## 8. விஷி.

விஷி அரசாங்கத்தின் உள் நாட்டு மந்திரி என்ற முறையில், அட்மிரல் தார்லான், 22 நகர சபைகளைத் தற்காலிகமாக வேலை செய்யாத வண்ணம் நிறுத்தி வைத்துவிட்டார். அரசாங்கத்துக்கு விரோதமான மனப்பான்மையைக் காட்டியதற்காக, இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. நகர சபைகளின் வேலைகள் ஒரு தனிக்கமிட்டிக்கு ஒப்படைக்கப்பட்டது.

பிரான்சு தேசம் சர்வதேச சங்கத்திலிருந்து ('லீக் ஆப் நேஷன்ஸிலிருந்து) விலகிவிட்டதாக, அட்மிரல் தார்லான், சங்கத்தலைமைக் காரியதரிசிக்கு அறிவித்துவிட்டார். பிரான்சும் போய்விட்ட பிறகு, சர்வதேச சங்கத்தில் மிச்சமாக உள்ளது ஒரே நாடுதான். அதாவது, பிரிட்டன், பிரான்சு சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது, ஜெர்மனியின் கட்டாயத்தின் பேரில்தான் என்பதும், ஜெர்மனி பிரான்சை எவ்வளவுதூரம் ஆட்டிவைக்கிறதென்பதும் நன்றாகத் தெரிகிறதென்று "ராய்டர்" நிருபர் கூறுகிறார். வார்சேல்ஸ் உடன்படிக்கையின் ஆரம்ப பீடிகை, சர்வதேச சங்கத்தின் அடிப்படையான கொள்கை; அக்கொள்கை ஜெர்மன் நாஸிசத்துக்கு விரோதமானது. வார்சேல்ஸ் உடன்படிக்கையையும், அதன் பீடிகையையும், சர்வதேச சங்கத்தையும், ஒழிக்க வேண்டுமென்பது ஜெர்மனியினுடைய நோக்கம்.

பால்கன் பிரதேசத்தில் ஜெர்மனி அடைந்த வெற்றிகள், விஷி அரசாங்கத்தில் ஒரு பழைய வதந்தியைக் கிளப்பிவிட்டது. ஜெர்மனிக்கு அனுகூலமான பிரெஞ்சு மாஜி மந்திரியான லவால் என்பவர் விஷி அரசாங்கத்தில் மந்திரியாவாரா? அட்மிரல் தார்லானுக்கு இது இஷ்டமில்லை என்று தெரிகிறது. அட்மிரல் தார்லான் பேராசை பிடித்தவர்; தன்னுடைய பதவியின் ஆதிக்கத்தை, லவாலுடன் பங்கிட்டுக்கொள்ளச் சம்மதிக்கமாட்டார்.

ஜெர்மனியால் கைவசப்படுத்தப்பட்ட பாரிஸ் பத்திரிகைகள் அட்மிரல் தார்லானுக்குப் புத்திமதி கூறுகின்றன. ஜெர்மனியுடன் பகிரங்கமாகச் சேருவதில் காலதாமதம் செய்யக்கூடாதென்று அவைகள் சொல்லுகின்றன. விஷி அரசாங்கம் ஏன் ஜெர்மனியுடன் சேரவில்லை? ஒரு ஜெர்மன் பத்திரிகை அதன் காரணத்தைப் பின்வருமாறு கூறுகிறது:—"விஷியில் முடிவான வார்த்தை கூறுவதற்கு வேறொரு அட்மிரல் இருக்கிறார். அவர்தான் அமெரிக்காவின் ஸ்தானீகரான, அட்மிரல் லீஹி என்பவர். அவர் இரண்டு பயமுறுத்தல்களைச் செய்துவருகிறார். ஒன்று பிரான்சில் பஞ்சம் வந்து சேருமென்பது; மற்றொன்று, அமெரிக்காவுக்குச் சொந்தமான மார்டினீக் ('வெஸ்ட் இண்டிஸ்') என்ற மேற்கு இந்தியத் தீவில் உள்ள பிரெஞ்சு தங்கத்தைப்பற்றியது. அதாவது, பிரான்சினுடைய தங்கம் அமெரிக்காவிடம் இருக்கிறதென்பதுதான்".

## 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ரூமேனியாவில், உள்நாட்டு கலகம் ஏற்பட்டிருக்கிறது, ரூமேனிய முதன் மந்திரி ஜெனரல் ஆண்டனெஸ்கோ என்பவர் தனக்கு விரோதமாக உள்ள இரும்புப் பாதுகாப்புப்படை ('அயர்ன் கார்ட்') தலைவர்களை, சிரச்சேதம் செய்யும்படி கட்டளையிட்டார். அரசாங்கத்துக்கு விரோதமாக சில துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டதால், எல்லா அச்சாபீஸ் யந்திரங்கள் முதலியன பதிவு செய்யப்படவேண்டும் என்று உத்தரவிட்டார். அவரைக் குறைகூறியதற்காக, ரூமேனியாவின் தலைமை ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் தியோடோரெஸ்கு கைது செய்யப்பட்டார்.

ருமேனியாவுக்கும், ஹங்கேரிக்கும் இடையில் உள்ள எல்லைகளைப்பற்றிச் சில தகராறுகள் இருப்பதாகவும், ருமேனியா பக்கத்திலிருந்து எல்லையை நோக்கி பீரங்கிகள் சுட்டதாகவும் தெரிகிறது.

ஹங்கேரியின் எல்லைக்கருகில் உள்ள ஜில்லாக்களுக்கு, 75,000 ருமேனியத் துருப்புகளை ஜெனரல் ஆண்டனெஸ்கு அனுப்பினார். ருமேனியா ஹங்கேரி எல்லையைத் தாண்டிப்போகும் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

ருமேனியாவுக்கும், ஜெர்மனிக்கும் நெருங்கிய நட்புரிமை இருப்பதாகவும், ருமேனியாவின் பிரதிநிதியாகிய ஜெனரல் ஆண்டனெஸ்கு செய்யும் காரியங்களை ஜெர்மனி ஆதரிக்கும் என்று ஜெர்மன் ஸ்தானீகர் கிள்ளிங்கர் பிரபு, ஹிட்லரின் சார்பாகக் கூறினார்.

ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் சமீபத்தில் வந்த குரோஷியா என்ற சிறு நாடு (யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிக்கப்பட்டது) யூதர்களுக்கு விரோதமாக சில விதிகள் ஏற்படுத்தியிருக்கிறது. அதன்படி, ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் இவைகளுக்கு யூதர்கள் செல்லக்கூடாது. ஜெர்மனியில் ஆரம்பித்த யூதர்கள் துவேஷம், குரோஷியாவிலும் ஆரம்பித்தாய்விட்டது போலும்.

### 10. நடு நிலைமை நாடுகள்.

ரஷ்யாவின் ஸ்தானீகர், மெய்ஸ்கி, பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் ஈடனை அயல் நாட்டுக் காரியாலயத்தில், லண்டனில் கண்டு பேசினார். பால்கன் பிரதேசத்திலிருந்து லண்டனுக்குத் திரும்பி வந்த பிறகு முதல் சம்பாஷணை இது தான். ஆனால் எந்த சமாச்சாரங்களைப் பற்றிப் பேசினார்கள் என்பது தெரியவில்லை.

ரஷ்யா, ஜப்பானுடன் செய்துகொண்ட நடுநிலமை ஒப்பந்தத்தைப்பற்றி, அமெரிக்க மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல், தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். பார்ப்பதற்குத் தோன்றுவதை விட, உண்மையில் அந்த ஒப்பந்தத்தின் முக்கியம் மிகக் குறைவானது என்று அவர் கூறினார்.

ரஷ்யாவின் முக்கியமான பத்திரிகையாகிய "பிரவ்தா" கூறுவதாவது:— "யுத்தத்தில் ரஷ்யாவை மாட்டி வைத்துவிடவேண்டும் என்று முயற்சிக்கும் அயல்நாட்டு அரசியல் வாதிகளுக்கு, இந்த ஒப்பந்தம் ருசிக்காது."

ஸ்பெயினுக்குப் பிரிட்டன் சமீபத்தில் கடன் கொடுத்திருந்தது. அதைக் கண்டித்து, பார்லிமெண்டு சபையில் சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசினார்கள். "அந்தப் பணம் நேராக ஜெர்மனியின் பைக்குள்தான் போகும்" என்று மகாகனம் வெட்ஜ்வுட் கூறினார்; சர் சாமுவேல் ஹோர் என்பவரை (இவர் சில வருஷங்களுக்குமுன் இந்தியா மந்திரியாயிருந்தவர்), ஸ்பெயினில் ஸ்தானீகராக வைத்திருப்பது வீண் செலவு என்றும் கூறினார். இதற்குப் பதிலளிக்கையில், பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது:—

"சென்ற வருஷம் பிரிட்டனுக்கு எதிராக ஸ்பெயின் யுத்தத்தில் சேரும் என்று பலர் நினைத்தார்கள். ஆனால் அது சேரவில்லை. அதற்குக்காரணம் சர் சாமுவேல் ஹோர் தன்னுடைய ஸ்தானீகர் கடமையை மிகத் திறமையாகச் செய்ததுதான். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், பிரிட்டனுக்கும், ஸ்பெயினுக்கும் மோசமான தொடர்பு இல்லாமல், நேசப்பான்மையான தொடர்பு இருப்பது மிகவும் சிலாக்கியம். ஸ்பானிய அரசாங்கம் பிரிட்டன்மேல் கோபித்துச் சண்டைபோட யாதொரு காரணமும் கொடுக்க, பிரிட்டன் விரும்பவில்லை. ஸ்பெயின் தேசத்து மக்கள் இப்போது பட்டினியால் வாடுகிறார்கள். அதனால்தான் பிரிட்டன் அவர்களுக்கு உதவி செய்கிறது."

ஸ்பெயினின் மந்திரிசபைக் கூட்டத்தில், சூனர் என்ற அயல்நாட்டு மந்திரி, தற்போதைய யுத்த நிலைமையை விளக்கிக்காட்டினார்.

நடுநிலைமை நாடுகள் ரஷ்யாவும், ஸ்பெயினும் மாத்திரமல்ல. ஈராக்கும், அயர்லாந்தும்கூட நடுநிலைமை நாடுகள்தான். ஈராக் என்பது துருக்கி, அரேபியா, பாரசீகம் ஆகிய மூன்று நாடுகளின் மத்தியில் இருப்பது. ஈராக்கில், பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும்போய்ச் சேர்ந்திருக்கின்றன. துருக்கி ஒருக்கால் யுத்தத்தில் ஈடுபட நேர்ந்தால், அதற்கு ஈராக் மிக முக்கியமான உதவி செய்ய முடியும். பிரிட்டிஷ் துருப்புகள் ஈராக்குக்குச் சென்றது ஜெர்மனிக்கு ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்ததென்று தெரிகிறது. ஈராக்கு மக்கள் பிரிட்டிஷ் துருப்புகளைப்பற்றி அனுகூலமான அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலும் இதைப்பற்றிப் பாராட்டப்படுகிறது.

அயர்லாந்து நடு நிலைமை வகிப்பதை வற்புறுத்தி, பாதுகாப்பு மந்திரி, மிஸ்டர் ஜக்கன் ஒரு கூட்டத்தில் கூறினார். அந்தக் கூட்டம் "அயர்லாந்து நடுநிலைமையை விரும்பும் அமெரிக்க நண்பர்கள்" சங்க ஆதரவில் நடைபெற்றது. உணவுப்பொருள்கள், யுத்த சாமான்கள் முதலிய எதற்கும், நாட்டு மக்கள் தங்களுடைய சுதந்தர உரிமைகளை இழக்க மாட்டார்கள் என்று சொன்னார். அயர்லாந்து, தன்னை யாராவது தாக்கினாலொழிய, நடுநிலைமைக் கொள்கையிலிருந்து மாறப்போவதில்லை என்று மிஸ்டர் ஜக்கன் உறுதி கூறினார். அயர்லாந்தின் துறைமுகங்களை வாடகைக்கு விட முடியாதென்றும் மறுத்தார்.

ஒரு ஜெர்மன் வெடிகுண்டு விமானம் அயர்லாந்தில், கார்க் மாகாணத்தின் கடலில் விழுந்து முழுகிவிட்டது. அதிலிருந்த விமான ஓட்டிகள் கரையேறிச் சென்றார்கள். அவர்கள் நாட்டுக்குள்ளேயே தக்க பாதுகாப்பில் வைக்கப்பட்டார்கள்.

அயர்லாந்தில் கோதுமை மாவு பஞ்சம் ஏற்படும் போலிருக்கிறது. இப்போதிருக்கும் கோதுமை மாவு இன்னும் சில மாதங்கள் வரைக்கும்தான் வரும். ஆகையால், கால்நடைகளுக்கு கோதுமையை உபயோகப்படுத்தினால் உபயோகிப்பவர்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என்று போலீஸ் அதிகாரிகள் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

# கிரீஸ் தேசம்: பண்டைப் பெருமையும், தற்காலச் சிறப்பும்.

## முசோலினியை முறியடித்து, ஹிட்லரைத் தடுத்துப் போராடிய விவரம்.

கிரீஸ் என்பது ஐரோப்பா கண்டத்தில் பால்கன் தீபகற்பத்திலுள்ள ஒரு முக்கியமான நாடாகும். இடலிக்கு கிழக்கிலும், யூகோஸ்லாவியா, பல்கேரியா இவைகளுக்குத் தெற்கிலும், துருக்கிக்கு மேற்கிலும், ஆப்பிரிக்காவிலுள்ள லிபியாவிற்கு, மத்தியதரைக் கடலுக்கப்பால், நேர் வடக்கிலும், கிரீஸ் என்ற புராதனமான நாடு இருக்கின்றது. அதனுடைய விஸ்தீரணம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் சதுர மைல்கள்; அதனுடைய ஜனத் தொகை 63 லட்சம். பூகோளப் படத்தில் பார்த்தால் அது சிறு நாடாயிருந்தாலும், நாகரிகத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் பேர்போனது. 2,500 வருஷங்களுக்குமுன்பே, கிரீஸ் தேசம் சிறந்த நாகரிகத்துடன் விளங்கியது. கிரீஸ் தேசத்தில் உள்ள நகர அரசாங்கங்கள், சுதந்தரம், அழகு, கலை, பூரண பக்குவமடைதல் இவைகளை வளர்த்துப் பாதுகாத்தன. இதில் ஆதென்ஸ் என்ற கிரீசின் தலைநகரம் முதன்மையாயிருந்தது. ஸ்பார்டா என்ற பிரபல தலைநகரம், கடமை, ஒழுங்கு இவைகளைச் சரிவரச் செய்வதில் பேர்போனது.

கிரேக்கர்கள் ஒருகாலத்தில் மத்தியதரைக் கடலை ஆள்பவர்களாயிருந்தார்கள்; தங்களுடைய தேசீய சுதந்தரத்தைக் காப்பதற்காக அபூர்வமான வீரச் செயல்களைச் செய்தார்கள்; தெர்மாபைலே,

மாரதான், சாலாமிஸ், பிளாடாஸ் என்ற இடங்களில் பண்டைக் காலத்தில் நடந்த சண்டைகளில் கிரேக்கர்கள் எப்போதும் அழியாத புகழ் பெற்றுர்கள்.

### ஒரு குருட்டுக் கவி.

கிரேக்க சரித்திரத்தில் சிறந்த அறிவாளிகளும் தத்துவஞானிகளும், இலக்கிய ஆசிரியர்களும் இருந்திருக்கிறுர்கள். அவர்களால் எழுதப்பட்ட நூல்களை இன்றைக்கும் மக்கள் படித்து, ஆனந்தித்து, பயனடைகிறுர்கள். அவர்களில் முதன்மையானவர் ஹோமர் என்ற குருட்டுக்கவி. அவர் ட்ரோஜன் சண்டை என்பதைப்பற்றி எழுதிய காவியத்தில், கிரேக்கர்களுடைய வீரத்தனமான லட்சியங்களைப் பற்றி மிக அழகாகப் பாடியிருக்கிறுர். சாபோ என்ற பெண் பாடகரும் கிரேக்க சரித்திரத்தில் பேர் போனவர். நாடகம் எழுதுவதில் கெட்டிக்காரர்கள், ஈஸ்கைலஸ், சோபாகிளிஸ், யூரிபிடிஸ், அரிஸ்டோபானஸ் என்பவர்கள். தத்துவஞானத்தில் உலகம் புகழும் பெருமை பெற்றவர்கள் பிளேடோ என்பவரும், அரிஸ்டாடில் என்பவருமாவர். சோலன் என்ற சிறந்த அறிவாளி, தெமிஸ்டாகிளிஸ், பெரிகிளிஸ் என்ற அரசியல் நிபுணர்கள், ஹெரோடாடஸ் என்ற சரித்திராசிரியர், டெமாஸ்தெனிஸ் என்ற பிரபல பேச்சாளர், இவர்களெல்லோரும் கிரீசுக்குப் பேரும் புகழும் கொண்டுவந்த பெரியார்கள். இவர்களெல்லோரையும்விட சிறந்தவர் சாக்ரடீஸ் என்ற மகான். அவர் தன்னுடைய கொள்கைகளுக்காக உயிர் நீத்த மகா உத்தமர்.

கிரேக்கர்கள் சுதந்தரத்தையும், சுயேச்சையையும் விரும்புபவர்கள். அவைகளைக் காப்பதற்காக வெளி நாட்டுக் கொடுங்கோல் அரசர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்து பண்டைக்காலத்தில் போராடி யிருக்கிறுர்கள். ஆதியில் பாரசீகர்களோடு போர்புரிந்திருக்கிறுர்கள்; சென்ற நூற்றுண்டில் துருக்கி தேசத்தாரோடு சண்டையிட்டு தங்களுடைய சுதந்தரத்தைப் பெற்ருர்கள்; இந்தச் சண்டையில் பிரிட்டனும், ரஷ்யாவும், கிரீசுக்கு உதவி செய்தன. கிரேக்கர்கள், ஆட்டோமன் என்ற பழைய துருக்கி ஏகாதிபத்தியத்திலிருந்து விலகிக்கொண்ட பிறகுதான் ஐரோப்பாவில் தேசிய உணர்ச்சி அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தது.

1908-ம௵த்தில் துருக்கியில் பெரும்புரட்சி ஆரம்பித்தபோது, பால்கன் நாடுகள், அதை ஒரு சந்தர்ப்பமாக உபயோகித்துக்கொண்டு, காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றபடி, கிரீசும், இதர பால்கன் நாடுகளும், தங்களுக்குள் ஒரு ஒற்றுமைச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டன. ஆனுல், சீக்கிரத்தில், கிரீசுக்கும், பல்கேரியா என்ற மற்றெரு பால்கன் நாட்டுக்கும் சண்டை உண்டாய்விட்டது. இந்த சண்டையில், கிரீஸ் வெற்றியடைந்தது; பெருமை பெற்றது; அத்தோடு, கிரீட் என்ற தீவையும், சாலோநீகா என்ற மாகாணத்தையும் தனக்குச் சொந்தமாகப் பெற்றது.

### சென்ற யுத்தமும், கிரீசும்.

சென்ற 1914-ம் வருஷத்தில் தொடங்கிய மகா யுத்தத்தில், வெனிசீலாஸ் என்ற கிரேக்க அரசியல் நிபுணரின் தலைமையின்கீழ், கிரீஸ், பிரிட்டனுேடும், அதன் நேசதேசத்தார்களோடும் சேர்ந்து, ஜெர்மனிக்கு விரோதமாகப் போராடியது. ஜெர்மனிக்கு அனுகூலமாக இருந்த அரசர் கான்ஸ்டண்டைன் நாடுகடத்தப்பட்டார். யுத்தம் முடிந்தவுடன், வேறு சில பிரதேசங்களும் கிரீசுக்குக் கொடுக்கப்பட்டன. அதனுல் ஈஜியன் கடலின் இருபாகத்திலும், கிரீஸ் ஆதிக்கம் செலுத்தும்படியான நிலைமை ஏற்பட்டது.

ஆனுல், 1920-ம் வருஷம், கிரீசை ஆண்டு கொண்டிருந்த அரசர் அலெக்சாந்தர், ஒரு குரங்கால் கடிக்கப்பட்டு, இறந்து போனுர். நாடுகடத்தப்பட்ட அரசர் கான்ஸ்டண்டைன் திரும்பி வந்து சிம்மாசனம் ஏறினுர். இதற்குமுன், வெனிசீலாஸ், கிரீசைத் துருக்கியுடன் ஒரு சண்டையில் இழுத்துவிட்டார். ஆனுல், துருக்கி, முஸ்தாபா கமால் பாட்சாவினுடைய சிறந்த தலைமையின் கீழ், வெற்றி பெற்றது. கிரேக்கர்கள் தோல்வியடைந்தார்கள்; கான்ஸ்டண்டைன் தம்முடைய அரசர் பதவியை விட்டு 1922-ம௵ விலகிவிட்டார்; பின்பு ஒரு வருஷம் கழிந்து இறந்துபோனுர்.

அரசர் பதவிக்கிருந்த மதிப்பு முழுவதும் போய் விட்டது. கான்ஸ்டண்டைனின் குமாரர், இரண்டாம் ஜார்ஜ் அரசர், 1924-ம௵ அரசப்பதவியிலிருந்து விலகும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். கிரீஸ் குடியரசாய்விட்டது. குடியரசு கட்சியினருக்கும், முடியரசு கட்சியினருக்கும், அனேக வருஷங்களாக, கட்சிச்சண்டைகள் நடந்து வந்தன. 1935-ம௵ முடியரசு கட்சியினர் அரசாங்கத்தைக் கைப்பற்றினுர்கள். அரசர் ஜார்ஜ் சிம்மாசனம் ஏறினுர். பல அரசியல் சம்பவங்களுக்குப்பிறகு, ஜெனரல் மெடாக்சாஸ் 1936-ம௵ முதன் மந்திரியானுர்; கிரீஸ் தேசத்தில் அரசியல் அமைதியை ஏற்படுத்தினுர். அதே வருஷம் ஆகஸ்ட்டு மாதம், சர்வாதிகாரியானுர்; சட்ட சபையைக் கலைத்தார்; அரசியற் கட்சிகளை அடக்கினுர். முசோலினியையும், ஹிட்லரையும், முழுவதும் பின்பற்றுவாரோ என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனுல், அது தவருன எண்ணம் என்று பின்னுல் தெரிந்தது.

### இடலியின் எச்சரிக்கை.

மெடாக்சாஸ் தன்னுடைய நாட்டுச் சுதந்திரத்தை விற்பவரல்ல. சென்ற வருஷம், அக்டோபர்மீ 28-ந் தேதி காலை 3-மணிக்கு இடலி, தான் சொல்லியபடி கிரீஸ் தேசம் செய்யவேண்டுமென்றும், இல்லாவிட்டால் மூன்று நாளைக்குள் போர் தொடங்கப்படுமென்றும் செய்த எச்சரிக்கையை, மெடாக்சாஸ் உதறித் தள்ளி, போருக்கு ஆயத்தமானுர். கார்பூ, கிரீட், எபீரஸ், பிரீன்ஸ் என்ற யுத்தத்திற்கு முக்கியமான இடங்களை, இடாலியத்துருப்புகள், யுத்த முடிவு வரைக்கும், வாசஸ்தலமாக உபயோகப்படுத்த அனுமதி கொடுக்கவேண்டுமென்று இடலி கேட்டது. கிரீசின் சர்வாதிகாரி, ஜெனரல் மெடாக்சாஸ் அனுமதி கொடுக்க முடியாதென்று மறுத்தார். "கிரீசின் சுதந்திரத்துக்காகவும், கௌரவத்துக்காகவும், போராடும்படியான நேரம் வந்துவிட்டது" என்று நாட்டுமக்களுக்கு அறிக்கை விடுத்து, பட்டாளங்களெல்லாம் ஒன்று சேர்ந்து யுத்தத்திற்கு ஆயத்தமாகும்படி உத்தரவிட்டார். இடலியின் எச்சரிக்கை நேரம் முடிவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்பே, இடாலியத்துருப்புகள் அல்பேனியாவிலிருந்து கிரேக்க எல்லையைத் தாண்டின.

இடலியின் வலிமைக்கு எதிராக, சிறுநாடாகிய கிரீஸ் ஏன் போர்க்கோலம் கொண்டது? இதற்குச் சில காரணங்களுண்டு. இந்த நிலைமையை எதிர் பார்த்து, ஜெனரல் மெடாக்சாஸ் முன்னமேயே, தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார்; துருக்கி தேசத்துடன், பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்திருந்தார். பால்கன் ஒற்றுமை ஒப்பந்த நாடுகளில் கிரீஸ் ஒன்று; மற்ற நாடுகள் துருக்கி, ரூமேனியா, யூகோஸ்லேவியாவாகும். இந்த ஒற்றுமை ஜெர்மன் ஏகாதிபத்திய அட்டகாசத்தினுல் உடைக்கப்பட்டது. எல்லாவற்றையும் விட மிக முக்கியமான காரணம், பிரிட்டன் உதவி செய்வதாகக் கூறிய உறுதி மொழிதான். முசலோனி, கிரீசின்மேல் படையெடுத்ததும், பிரிட்டிஷ் யுத்தமந்திரி சபை கூடியது. அதன் பின் ஜெனரல் மெடாக்சாசுக்கு, பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஒரு செய்தி அனுப்பினுர். "உங்களுக்கு எங்களாலான எல்லா உதவியும் செய்வோம். நாம் ஒரு பொது விரோதியோடு போராடுகிறேும். நாம் ஒற்றுமையுடன் வெற்றி காணுவோம்" என்பதுதான் அந்தச் செய்தி.

### கிரீசுக்குப் பேருதவி.

வாக்களித்ததன்படி, பிரிட்டன் கிரீசுக்குப் பேருதவி செய்தது. கிரேக்கர்களுடைய தேசாபிமானமும், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையின் வலிமையும், இடாலியத் துருப்புகளை, கிரீசை விட்டுத் துரத்தியதோடல்லாமல், இடலியால் கைப்பற்றப்பட்ட அல்பேனியாவுக்குள்ளும் போர் நடத்தின. போரின் முதலில், இடாலியர்கள் மூன்று வழிகள் மூலமாக கிரீசுக்குள் பிரவேசிக்க முயற்சி செய்தார்கள். பிளாரினு என்ற பகுதியின் மூலமாக, மலைக்கணவாய்களின் பக்கமாக குறுக்குவழியில் சென்று, சாலோநீகா என்ற கிழக்கு தீபகற்பத்தைப் பிடிக்கவேண்டு

மென்பது முதல் முயற்சி. பிண்டஸ் பகுதியின் மூலமாக சென்று, யனீனு என்ற பட்டணத்தைப் பிடிக்கவேண்டுமென்பது இரண்டாவது முயற்சி. எபீரஸ் பகுதி வழியாக, கரையோரமாகச்சென்று கார்பூ என்ற தீவைக் கைப்பற்றவேண்டுமென்பது மூன்ருவது முயற்சி.

பிளாரினு பகுதியில், கிரேக்கர்கள் மலையுச்சிகளி லிருந்து இடாலியர்கள் முன்னேக்கி வருவதைத் தடுத்தார்கள். அல்பேனியாவில் இடலியின் முக்கிய 'சப்ளை' ஸ்தலமாகிய கோரிட்சாவை, 9-ம் நாள் யுத்தத்திற்குப் பிறகு, சென்ற நவம்பர்மீ கிரேக்கர் கள் கைப்பற்றினர்கள். இதனுல் சாலோ நீகா வுக்கு இருந்த பயம் போய்விட்டது.

பிண்டஸ் பகுதியில், யனீனு வரைக்கும் சென்ற இடாலியர்கள், அங்கு கிரேக்கர்களுடைய தந்திர வலையில் அகப்பட்டு அழிக்கப்பட்டார்கள். கிரேக்கர் கள் முன்னேறிச் சென்று அல்பேனியாவில் பல இடங்களைப் பிடித்தார்கள். சென்ற நவம்பர்மீ, மஸ்கோபாலிஸ், போகிராடெட்ஸ் என்ற இடங்களை யும், டிசம்பர்மீ பிரேமேடி, சாந்திகுவாரண்ட, (அல்பேனியாவின் தெற்கு முனை), ஆர்கிரோ காஸ் திரோ, டெல்வினே, பேமர்டோ, பலர்மோ, சிமரா, முதலிய இடங்களையும், கிரேக்கர்கள் பிடித்தார்கள். பனிக்கட்டியும், மழைக்காற்றும் அல்பேனிய மலைச் சாரல்களில் இருந்த காரணத்தால், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சண்டை நிறுத்தப்பட்டது. இருந்தபோதிலும், மத்திய பகுதியில் முக்கியமான பட்டணமாகிய கிளி சூராவைக் கிரேக்கர்கள் பிடித் துக்கொண்டார்கள்.

முசலோனி, அல்பேனியாவிலுள்ள தனது ராணுவ தளகர்த்தர்களை அடிக்கடி மாற்றியும், தானே அல் பேனியாவுக்கு வந்து, தன்னுடைய துருப்புகளுக் குத் தைரியம் சொல்லியும், முடிவில் ஒன்றும் பயன் பெறவில்லை. முயற்சிகளெல்லாம் முழு தோல்விகளாயின. திரும்பித்தாக்கும் முயற்சிக ளெல்லாம், இடாலிய துருப்புகளுக்கு மிகுந்த சேதத்தை விளைவித்தது; இடாலியர்கள் தங்களு டைய மனே தைரியத்தையும் இழந்தார்கள்.

இதற்கிடையில் கிரேக்கர்களுடைய தலைவர், ஜென ரல் மெடாக்சாஸ், திடீரென்று இறந்துபோனர். ஆனல், கிரேக்கர்கள் இடைவிடாது தொடர்ச்சியாக தைரியத்துடன் போர்புரிந்துவந்தார்கள். மார்ச்சுமீ 15-ந்தேதிக்குள், இடாலியர்களுடைய திட்டங்களைச் சுக் கல் சுக்கலாக உடைத்தெறிந்தார்கள். அல்பேனியா வுக்குள், கிரேக்கர்கள் முன்னேறிச்சென்று, வெலொனு, துராசோ, என்ற எட்ரியாடிக்கடல் துறைமுகப்பட்டணங்களை நோக்கிச்சென்ருர்கள். கிரேக்கர்களுடைய தளகர்த்தர், ஜெனரல் பாபகோஸ், தம்முடைய துருப்புகளுக்குக் கூறியதாவது :—"இப் போதும், எப்போதும், இறப்பு நமக்கு ஒரு அலட்சியம் என்பது தான் நமது கொள்கை."

---

## ரஷ்யா ஜெர்மனியுடன் போர் செய்யுமா?

### நடுநிலைமையைப்பற்றி ஒரு சிறு ஆராய்ச்சி.

ஜெர்மனி, டார்டனல்ஸ் ஜலசந்தியை நெருங்க நெருங்க, ரஷ்யா நடுநிலைமை வகிப்பதை நீக்கும் படியான நிலை வந்திருக்கிறதென்று சொல்லலாம். முதலில் ருமேனியாவை ஜெர்மனி கைப்பற்றிய போது, அதைப்பற்றித் தனக்கொன்றும் தெரியா தென்றும், அச்செய்கை தன்னுடைய ஆதரவைப் பெறவில்லை என்றும் கூறியது. பல்கேரியாவை ஹிட்லர் பிடித்தபோது, அதைத் தான் வெறுப்ப தாக ரஷ்யா கூறிற்று. ஜெர்மனி ஜலசந்தியை அணுகும்படியாக இருப்பதைக் கண்டு, துருக்கிக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தால், தான் நடு நிலைமை வகிப்பதாக துருக்கிக்கு ரஷ்யா வாக்களித் தது. பின்பு யூகோஸ்லாவியாவிடம் நட்புரிமை ஒப்பந்தம் செய்தது. படிப்படியாக நடுநிலைமைக் கொள்கை கைவிடப்பட்டு வருவது பாராட்டத் தக்கதாயிருந்தாலும், இந்த நெருக்கடியான நிலை மையில் ஏன் ரஷ்யா பகிரங்கமாக ஜெர்மனியிடம் விரோதப்பான்மை காட்டக்கூடாது?

இதற்குக் காரணம் ஜெர்மனி ரஷ்யாவின் மேல் சீக்கிரம் படையெடுக்கும் என்ற வதந்தி ஜெர்மனி யில் உலவி வருவதாயிருக்கலாம். மற்ற நாடுகளை மிரட்டியதுபோல், ரஷ்யாவையும் ஜெர்மனி மிரட்டப் பார்க்கிறது. பின்லாந்தில் ரஷ்யாவுக்கு எதிரிடை யாகக் கலகமும், யூக்ரேனிலும், ஜார்ஜியாவிலும் அரசாங்கத்தைக் கவிழ்க்க விரும்பும் சதியாலோ சனைக் கூட்டங்களும் ஜெர்மனி உண்டாக்கி வருவ தாகத் தெரிகிறது. இதனுல் ரஷ்யா வெளிப்படை யாக பால்கன் நாடுகளுக்கு உதவிசெய்யக் கூடாதநிலை மையிலிருந்தது. ஜெர்மனியினுடைய மிரட்டல் ஆயுதம் ரஷ்யாவைப் பயப்படுத்தக்கூடியதல்ல என்பது, பிரிட்டன் கட்டாயம் ஜெயிக்கும் என்ற உணர்ச்சி ஸ்டாலினுக்கு (ரஷ்ய சர்வாதிகாரிக்கு) வந்ததும்தான் நன்ருகப் புலப்படும்.

ரஷ்யா இப்போது ஜப்பானுடன் நடு நிலைமை ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் பொருள் என்ன என்பதைப்பற்றி, பலர் பல வித மாகக் கூறுகிருர்கள். சீன இந்த ஒப்பந்தத்தைக் கண்டித்திருக்கிறது. ஜப்பான் மஞ்சுகோவைப் பிடித் தது, ரஷ்யா, மங்கோலியாவைப்பிடித்தது, இந்த இரண்டு விஷயங்களையும் ஒப்பந்தத்தில் ஒத்துக் கொண்டதை, சீன ஆட்சேபித்தது. ஆனல் யுத்த உதவி முன்பு கொடுத்தது போல, ஒப்பந்தத்திற்குப் பிறகும், ரஷ்யா சீனவுக்கு உதவிசெய்யும் என்று உறுதிமொழி யளித்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தி ஞல் யாருக்கு லாபம்? ரஷ்யாவுக்குத்தான் லாபம் என்று தெரிகிறது. ஏனென்ருல் தென் கிழக்கு ஐரோப்பாவில் நடப்பதையும், ஹிட்லர் தன்னுடைய வாழ்க்கைச்சரித்திரமாகிய "மெய்ன்காம்ப்" பில் தூரதிருஷ்டித்திட்டம் போட்டிருப்பதையும், கவனித் துப் பார்த்தால், ரஷ்யாவினுடைய யோசனை விளக் கமாகத்தெரிகிறது. அதாவது, ஒருக்கால் ஜெர்மனி யுடன் போராடவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால், தனக்குப் பின்புறத்தில் இருந்து ஜப்பான் தாக் காதிருக்கவேண்டும் என்பது தான் அந்த யோசனை. ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தம், ரஷ்யாவு க்கு அந்தப் பாதுகாப்பைச் செய்திருக்கிறது என்று சொல்லலாம்.

இப்போது வடக்கு ஐரோப்பாவில் நடக்கும் சம்ப வங்களிலிருந்து, ஜெர்மனிக்கும், ரஷ்யாவுக்கும் ஒரு அளவுக்கு அபிப்பிராய பேதம் உண்டாகியிருக்கிறது என்று தெரிகிறது. ஒப்பந்தத்தின்படி ரஷ்யாவுக்கு அனுப்பவேண்டிய இயந்திர சாமான்களை ஜெர்மனி அனுப்பவில்லை. அப்படியானல், தான் அனுப்ப வேண்டிய எண்ணெய் முதலிய சாமான்களை அனுப் பமாட்டேன் என்று ரஷ்யா கூறுகிறது.

ஜெர்மனிக்கு ஆதரவு காட்டியதால், ரஷ்யா பல லாபங்களைச் சம்பாதித்திருக்கிறது. இனிமேல் ஜெர்மனியோடு உறவாடுவது லாபமுமல்ல, அரசி யல் தந்திரமான காரியமுமல்ல என்று ரஷ்யா தெரிந்துகொண்டது. இருந்தபோதிலும், கூடிய சீக்கிரத்தில் ஒரு நெருக்கடியான நிலைமையை, ரஷ்யா தானே உண்டாக்காது. ஜெர்மனியும், மத் தியதரைக்கடலிலும், அட்லாண்டிக் கடலிலும் நடக் கும் யுத்தத்தில் கவனம் செலுத்திவரும்போது, ரஷ்யாவுடன் சண்டைபோடும்படியான நிலைமையை ஏற்படுத்திக்கொள்ளாது.

---

## பால்கன் சண்டையில் யுத்த தந்திரம்.

பால்கன் பிரதேசத்தில் நடக்கும் சண்டையைப் பற்றி அதிக சந்தோஷப்படுவதற்கு இடமில்லை. கிரேக்கர்கள் விடாமல் எதிர்ப்பார்களென்றும், யூகோஸ்லாவியா ஜெர்மனியின் கட்டளையை அலட்சியம் செய்யுமென்றும், ஜெர்மனி எதிர்பார்க்கவில்லை. அந்த சமயத்தில், பிரிட்டன் என்ன செய்யவேண்டு

மோ அதைச் செய்தது—அந்த நாடுகளுக்கு உதவி செய்தது. ஆனால் யூகோஸ்லாவியாவுக்கு வேண்டிய காலத்தில் துரிதமாக உதவியனுப்ப முடியவில்லை. பிரிட்டனின் நிலைமையை யூகோஸ்லாவியா நன்றாக அறிந்து, அதை ஒத்துக்கொண்டிருக்கிறது. அநேக கஷ்டங்களுக்கிடையில், பிரிட்டன் மத்தியதரைக்கடலில் வேண்டிய சாமான்களைக் கொண்டுவருவதற்குத் தகுந்த பலமும், சௌகரியமும், சம்பாதித்துக் கொண்டு இருக்கிறது.

மத்தியதரைக்கடலின் இரண்டு பக்கத்திலும் நடக்கும் சண்டைகளில், யுத்த தந்திர ஒற்றுமையிருப்பதைக்காணலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் ஒரு குதிரை லாடத்தைப்போல் வளைந்திருக்கின்றன. அதனுடைய மத்தியபாகம் ஈஜிப்டில் உள்ள அலெக்சாந்திரியாவிலும், சூயஸ் கால்வாயிலும் இருக்கின்றன. அதனுடைய இடது பக்கம் சிரிநீகா வரையில் போயிருக்கிறது; வலது பாகம் யூகோஸ்லாவியா, அல்பேனியா, கிரீஸ்; இவைகளை மத்திய ஸ்தானத்தில் கடலின் மூலம சந்திக்கும்படி செய்தது கிழக்கு மத்தியதரைக் கடலில் இருக்கும் பிரிட்டிஷ் கப்பற் படையின் பலம்தான். மத்திய பாகத்தில், இப்போது சண்டை முடியும் தருவாயிலிருக்கிறது. இடாலியக் கிழக்கு ஆப்பிரிக்கா ஜெயிக்கப்பட்டது; 200,000 துருப்புகள் கொண்ட இடாலியச்சேனை அழிக்கப்பட்டது; இடலியின் கப்பற்படை ஏறக்குறைய முழுவதுமே நாசம் செய்யப்பட்டது.

ஒரு அமெரிக்க நிபுணர் கூறுவதாவது:—"கேரன்மலைகளின்மேல் பிரிட்டிஷ் துருப்புகள் இடாலியர்களை விரட்டியடித்தபோது, யுத்தத்தின் பூகோளப்படமே ஒரு பெரிய மாறுதலை யடைந்தது என்று யாரும் நினைத்திருக்கமாட்டார்கள். அமெரிக்க கப்பல்கள் சிகப்புக் கடலில் தாராளமாகச் செல்லும் நிலைமை ஏற்பட்டபோது, இந்த மாறுதல் ஆரம்பித்தது என்று சொல்லலாம்." 'சப்ளை' சாலைகளுக்கு வெளியிலிருந்து வரும் சாமான்கள், பிரிட்டன் அல்லது அமெரிக்காவிலிருந்து, முதலில் கேப்டௌன் என்ற ஆப்பிரிக்காவின் தென்கோடிக்கு வந்து, அங்கிருந்து சுற்றிக்கொண்டு, சிகப்புக் கடல் துறைமுகப்பட்டணங்களுக்கு வந்து சேர்ந்து, பிறகு குதிரைலாட மத்திய பாகமாகிய அலெக்சாந்திரியாவுக்கு வருகின்றன.

### கிரேக்கர்களின் வீரப்போர்.

யூகோஸ்லாவியாவுக்கும், கிரீசுக்கும் இடையில் பிளவுண்டாக்கி, அதனால் எவ்வளவு வெற்றி பெற முடியுமோ அவ்வளவும் ஜெர்மனி அடைந்திருக்கிறது. ஹிட்லர் தன்னுடைய ஆள் பலமும் யந்திர பலமும், பூரணமாக உபயோகித்ததினால், யூகோஸ்லாவியா, தைரியமாகப் போராடியும், முடிவில் சரணமடையும்படியாய் விட்டது. பாதுகாக்கப்படாத பெல்கிரேட்டில் உள்ள மக்களில் 12,000 பேர்களை ஜெர்மன் ருமானிகள் சுட்டுக் கொன்றார்கள். மனிதர்களுடைய உயிர் அவர்களுக்கு அற்பமானது என்பதைப் போலந்திலும், ஹாலந்து முதலிய தேசங்களிலும் ஜெர்மானியர்கள் முன்பே காட்டியிருக்கிறார்கள். யூகோஸ்லாவியாவின் அரசர் பீடர், ஜெனரல் சிமோவிச். இதர மந்திரிகள், இவர்கள் எல்லோரும் இப்போது ஜெருசலேம் என்ற இடத்தில் இருக்கிறார்கள். யூகோஸ்லாவியா முன்னமேயே பிரிட்டிஷ் ராணுவத் தலைவர்களோடு பேச மறுத்திராமல், பிரிட்டிஷாரோடு நெருங்கிய ஐக்கியம் வைத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, நேசதேசப் படைகள், இவைகளால் உதவி செய்யப்பட்ட கிரேக்கர்கள் வீரத்துடன் போர்புரிந்துகொண்டு வருகிறார்கள்.

# வட ஆப்பிரிக்காவில் ஜெர்மன் படை.

## எண்ணெய் சப்ளைக்கும் குடிதண்ணீருக்கும் திண்டாட்டம்.

வட ஆப்பிரிக்காவில் ஜெர்மானியருக்கு ஆள் பலமும், டாங்கி பலமும் அதிகமாயிருக்கிறதென்பது சொல்லாமலேயே விளங்கும். இதாலியர்களும் தற்போது ஜெர்மன் தலைமையின் கீழிருப்பதால் முன்போல கோழையாயிருக்கமாட்டார்கள். இதுவரை ஜெர்மானியர் தங்கள் டாங்கிகளுக்கு அவசியமான எண்ணெயை விமான மூலம் சேர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இன்னொரு கஷ்டமான விஷயம் குடிதண்ணீர் சப்ளை. ஜெர்மானியர் முன்னேற முன்னேற இக்கஷ்டம் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை என்று **டைம்ஸ்** ராணுவ நிருபர் எழுதுகிறார்.

பிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்ட கடல் வழியாய் ட்யூனிஷியாவுக்கும் அங்கிருந்து லிபியாவுக்கும் ஜெர்மன் உதவி போய்ச்சேர்ந்ததாக சில லண்டன் பத்திரிகைகள் கூறுகின்றன. இது உண்மையாயிருந்தால், அது மிகவும் கவலைக்கிடமானதென்று **டெய்லி டெலக்ராப்** எழுதியிருக்கிறது. ஏனெனில் இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் பிரெஞ்சுக் கடல் அநீத முறையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதிலிருந்து ஷி விஷயம் விஷி கவர்ன்மெண்டுக்குத் தெரிந்துதான் நடந்ததா என்னும் கேள்வியும் எழுகிறது.

அட்மிரல் டார்லான் பிரிட்டன்மீது கொண்டுள்ள வெறுப்பிலிருந்து விஷி கவர்ன்மெண்டு இதற்கு உடந்தையாயிருந்ததாகவே அனுமானிக்கலாம். தவிர ஜெர்மனி நெருக்குவதற்காக விஷி காட்டும் பிரெஞ்சு–ஜெர்மன் இணைப்பின் ஓரடையாளமாகவும் இது நேர்ந்திருக்கலாம். இதில் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால்: சென்ற சில வாரங்களாக இந்த ஜெர்மன் நெருக்குதல் சம்பந்தமாகப் பேச்சே கிளம்பவில்லை. இதற்கென்ன அர்த்தம்? நாஜிகளுக்குந் திருப்தி ஏற்பட்டுவிட்டது என்றா? ட்யூனிஷியக்கடல் ஜெர்மானியர் போக்குவரத்துக்குக் கிடைத்திருப்பது எதிரிக்குப் பெரிய அனுகூலம்தான். இதை பிரிட்டன் நியாயமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

## ஈராக்கில் இந்தியத் துருப்புகள்.

ஈராக் என்ற தேசத்துக்குக் கிழக்கில் பாரசீகமும், தெற்கில் அரேபியாவும், வடக்கில் துருக்கியும், மேற்கில் சிரியாவும், டிரான்ஸ் ஜார்டனும் இருக்கின்றன. இதனால் துருக்கிக்கும் நேசதேசத்தார்களுக்கும் ஈராக் எவ்வளவு முக்கியமானது என்பது புலப்படும். ஈராக்கின் அரசாங்கம் சமீபத்தில், சயத்ரஷித் அலி என்பவரால் கைப்பற்றப்பட்டது. அவர் பிரிட்டனோடு 1930-ம் வருஷம் ஈராக் செய்துகொண்ட உடன்படிக்கையை எப்போதும் காப்பாற்றப்போகிறேன் என்று சொன்னார். அந்த உடன்படிக்கையின்படி, யுத்தகாலத்தில் ஈராக்கிலுள்ள ரயில்வேக்கள், ஆறுகள், துறைமுகங்கள், ஆகாய விமானச் சாலைகள், போக்குவரத்து சாதனங்கள் இவைகளெல்லாம் பிரிட்டனுடைய உபயோகத்துக்குக் கொடுக்கவேண்டும். அதன்படி பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், பஸ்ராவில் ஏப்ரல்மீ 17-ந் தேதி வந்திறங்கின. ஈராக் தேச மக்கள் அவர்களை வரவேற்றார்கள்.

ஜெர்மனி கிழக்கு நோக்கிப்போகும் எண்ணத்துடன், துருக்கியுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள முயற்சிக்கிறது. ஆனால் துருக்கி ஜெர்மனியின் வலையில் விழாது. பிரிட்டனுக்குத் துருக்கியின் நேசமும், ஈராக்கில் இப்போது இருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், ஹிட்லர் கிழக்கு நோக்கி செல்லும் முயற்சிக்குப் பெருந்தடையாயிருக்கின்றன.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.